# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com


**5 வயதுப்பிரிவு**
(01.01.2013 – 31.12.2013 வரையில் பிறந்தோர்)

## எங்கள் தாய்மொழி

எங்கள் தாய்மொழி தமிழ். வையகத்தின் மூத்த மொழி. அகிலம் எங்கும் பேசப்பெறும் அனைத்து மொழிகளுக்கும் வேராக விளங்குவது எங்கள் தாய்மொழி. தொன்மைச் சிறப்போடு இன்றும் செழுமையோடு வாழ்வது எங்கள் தமிழ்மொழி என்பதை நாங்கள் பெருமையோடு சொல்வோம்.

'முத்தமிழ்' என்ற சிறப்பைப் பெறுவது எங்கள் தமிழ்மொழி. இலக்கண, இலக்கிய வளத்துடன், காலத்துக்கு ஏற்ப கணினித் தமிழாகவும் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட எம் தாய்மொழியை மறப்பது தகுமோ!

சங்கம் அமைத்து தமிழை வளர்த்தனர் எம் முன்னோர்கள். தாய்மொழியில் அரசு நடாத்தி அழகு செய்தவர் எங்கள் தலைவர் மாமா. எங்கள் தாயகம் மீட்டு, மொழி காக்க உயிரைக் கொடுத்தனர் மாவீரர்கள். தன் மொழிக்காக உயிரைக் கொடுத்த இனமும் தமிழினமே!

எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தாய்மொழியை விருப்போடு கற்போம். தமிழைக் கண் போலக் காப்போம். தாயை விரும்புவது போல் தாய்மொழியாம் தமிழ் மொழியையும் விரும்புவோம். அதனை மூச்சாய் சுவாசிப்போம். தன்மானத் தமிழராய் வாழ்வோம். நாளை இந்த உலகை வென்று ஆள்வோம். மாவீரர் மேல் உறுதி எடுப்போம்.

தமிழே வாழ்க! எம் தாய்மொழியே வாழ்க!

நன்றி,

வணக்கம்.